ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/7 - 2019 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2019.01.22

*2107/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

**திருத்தம் - இலக்கம் 02**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2047/43 ஆம் இலக்க, 2017.11.30 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2014, யூன் 30 ஆந் திகதிய 1869/4 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு பின்வரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

**1. பந்தி 07 பிரிவு 7.3.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது :-**

**7.3.2.1 கல்வித் தகைமைகள்.-**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களுக்குத் திறமைச் சித்திகளுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம்/ எண்கணிதம்/தூய கணிதம்/அடிப்படைக் கணிதம்/வர்த்தக எண்கணிதம் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**பந்தி 07 பிரிவு 7.3.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது :**

**7.3.2.2 எழுத்துப் பரீட்சை :**

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| மொழியாற்றல் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவை தகைமைகாண் பரீட்சை | 100 | 40 |
| உளச்சார்பு | 100 | 40 |

ஒவ்வொரு பாடங்களுக்கும் குறைந்தது 40 சதவீதமான புள்ளிகளைப் பெற்று பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் ஆகக்குறைந்தது ஐம்பது (50%) வீதத்தையேனும் அதாவது 100 அல்லது அதற்கு அதிக புள்ளிகளைப் பெற்று, ஆட்சேர்ப்புக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுள் போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையைக் கண்டிப்பாகப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்படும்.

(இணைப்பு 03)

1A - PG 4365 — 18 (2019/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இணைப்பு 06 இன் கீழ் இல. 02, இல. 04 மற்றும் இல. 05 ஆகிய பகுதிகளில் "பரீட்சை" என்பதற்குப் பதிலாக "வினைத்திறன்காண் தடைப் பரீட்சை" என பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

3. இணைப்பு 06 தொடர்பாக அதன் இறுதியில் இல. 06 ஆக பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

06. மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பாக அரசாங்க சேவையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் அடங்கிய 10 நாட்களைக் கொண்ட பாடநெறியினை தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டு 05 ஆண்டுகளுக்குள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதன் அடிப்படையில் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உரியதான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் எனும் தேவைப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படுகின்றார்கள்

i. பாடநெறியை நடாத்தும் அதிகாரி : மத்திய மாகாண பிரதான செயலாளர் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

ii. பாடநெறி நடாத்தப்படும் கால எல்லை : I ஆம் தரத்திற்கு உரிய பயிற்சிப் பாடநெறிக்கு விணணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தல் ஒவ்வொரு வருடத்தினதும் முதற் காலாண்டில் பிரசுரிக்கப்படுவதோடு, அதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அளவினைக் கருத்திற்கொண்டதன் பின்னர் ஒரு வருடத்திற்கு நடாத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்

iii. பாடநெறியின் பாடத்திட்டம் :

| நிரல் கூறு | காலம் |
|---|---|
| அரச சேவையின் ஒழுக்காற்று நடைமுறை விதிகள் | 02 நாட்கள் |
| அரச நிதி முகாமைத்துவம் மற்றும் சொத்து முகாமைத்துவம் | 03 நாட்கள் |
| அமைப்பாண்மை உற்பத்தித்திறன் | 02 நாட்கள் |
| பெறுகை செயன்முறை நடைமுறை | 02 நாட்கள் |
| தகவல் அறியும் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு | 01 நாள் |

**குறிப்பு** :

01. மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய மத்திய மாகாண பிரதான செயலாளர் அல்லது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கமைய அரசாங்க சேவை பயிற்சி நிறுவகத்தின் மூலம் பாடநெறி நெறிப்படுத்தப்படுவதுடன், உரிய ஐந்து நிரல் கூறுகளையும் சிறப்பாகப் பூர்த்தி செய்வதன் மூலம் மாத்திரம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படும்.

02. மேலும், மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையைப் பூர்த்தி செய்வது தொடர்பாக மேற்படி (01) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் அல்லது (06) பகுதியின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியின் பாடத்திட்டத்தின் கீழுள்ள 05 நிரல்கூறுகளையும் சிறப்பாகப் பூர்த்தி செய்தல், இவை தவிர பரீட்சையின் பாடங்கள் மற்றும் பாடநெறியின் பாடங்கள் இணைந்து பாடத்திற்கு விலக்களிக்கப்படும் அடிப்படையில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் இருந்து எவ்விதத்திலும் விலக்களிக்கப்பட மாட்டாது.

எல். ஏ. சுஜாதா விஜேசிங்க,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2019, சனவரி 09.

02-227

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.